திருப்புகழில்

கிருஷ்ண லீலா- மகாபாரதம்.

	பாடல் எண்				திருப்புகழில்
	கி.வ.	செ.	ம	பாடல்	
1	—	60	43	களப மொழுகிய	திசைகள் பல பல
2	166	387	607	தொல்லை முதல்	பசுக்கள் வந்து
3	—	669	665	நகையொடு தோளுந்	சராசரங்கள் அசை
4	—	362	580	மாயா சொருப	பால் தயிர் திருடி
5	71	109	156	சிவனார் மனங்	வெண்ணெய் திருடி
6	—	165	121	உயிர்க்கூடு விடுமெ	தயிர் சோரன் என்று
7	—	184	178	பெரியதோர்	தயிரை உண்டு
8	—	411	629	நாமேவு குயிலாலு	கறந்த பாலைக்
9	—	736	731	கால முகில்வென	குழலூதும் பார்த்த
10	—	974	970	வேனின் மத	ஆலிலையில் துயில்
11	—	1022	1019	சிற்றுயக் கூட்ட	யசோதையின் முன்
12	—	408	626	நேசா சாரா டம்பர	தயிரை ஆ ஆ ஆ
13	—	1101	1098	நடையுடையிலே	தயிர் நெய் பால்
14	—	1172	1173	பரத வித புண்டரிக	உறி தாவு கள்வன்.
15	265	985	981	வனைரும் உட்பிணி	காளிங்க
16	—	245-2	526	நெச்சுப் பிச்சி	காளிங்க
17	—	402	620	மாந்தளிர்கள்	காளிங்கன் மீது
18	—	852	848	சொற் பிழை வராமெ	காளிங்கனை
19	—	1102	1099	மடலவிழ் சரோருக	காளிங்க
20	—	885	881	குடங்கள் நிரைத்	காளிங்க
21	—	868	864	தும்பி முகத்தானை	காளிங்க நர்த்

கிருஷ்ண லீலா.

தொனிதரு கருமுகில்: குழலோசையின் இனிமை
சேர குழல் ஊதும் கையன்.
வின்றி நிற்கும்படி குழல் ஊதும் எழில் அரி
கட்டுண்டு யசோதையிடம் அடிபட்டு அழுதது.
உரலோடு கட்டுண்டது
வசை மொழிந்த கோபிகைகளுடன் ஆடல் புரியும் அரி
பசி நீங்கிய மாயவன்
களவாடு தாமோதரன்
சாரதி; வெண்ணெய் தயிர் உண்டு அடிபடு சிறியவன்
மாயன்; பால் தயிர் அளைந்த முகுந்தன்
கூத்தாடி பால் தயிர் பெற்று உண்ட அரி
என்று உண்டது; பூதனையை வதம் செய்தது
குடித்து கட்டுண்டு அழுத கோபாலகிருஷ்ணன்
உரலோடு தவழ் நவநீத கிருஷ்ணன்
நர்த்தனம்
நர்த்தனம்
தாளத்தோடு நடமாடும் பாண்டவர் சகாயர்.
வெட்டித் துவைத்தது: பூதனையை வதம் செய்தது
நர்த்தனம்
நர்த்தனம்
தனம்: ஆநிரை மேய்த்த அச்சுதன்

திருப்புகழில்

	பாடல் எண்				
	கி.வ.	செ.	ம	பாடல்	
22	–	1012	1009	முருகுலாவிய	காளிங்க நர்த்தனம்.
23	–	678	674	பொன்றுமன்	கோவர்த்தன கிரியை
24	–	934	930	குருவு மடியவரடி	மருது நெறிபட உரலொ
25	–	774	770	சந்தனம் பரிமள	மலையைக் குடையாகப்
26	–	145	116	இரவியென வடவை	சகடு உதைத்தது :
27	–	143	181	மருமலரினன்துரந்து	கம்சனின் வஞ்சகங்களை
28	–	279	253	கச்சணியிள	கட்டுண்ட உரலோடு சென்று
29	249	855	851	இருவினையஞ்ச வருவினை	மருத மரம். கம்சன்
30	303	912	908	குருதி கிருமிகள்	உரலுடன் சென்று
31	315	668	664	வதன சரோருக	பஞ்சாயுத பாணி :
32	234	775	771	கருவியிகழ்ந்து	சகடாசுரனை அழித்து
33	–	267	276	தொடத்துளக்கிகள்	உலகை உண்ட
34	441	497	355	அனித்தமான	சகஸ்ர நாம
35	–	111	193	வஞ்சனை மிஞ்சிய	சகடாசுரன் வதம்; குருந்
36	–	583	442	விருமத வேள்வாளி	பதினாறாயிரம் மாதர்களை
37	320	786	782	மாவிறலெடுத்த	கண்ணன், கோடி
38	–	15	20	வரைத் தடங்	பாரிஜாத விருக்ஷத்தைப்
39	–	889	885	கந்த வார் குழல்	பாரிஜாத விருக்ஷத்தை
40	–	1279	1280	வேல் வாளைக் கொடிய	சங்கத்தை ஊதி
41	–	1182	1183	பொருத கயல் விழி	மருத மரத்தை முறித்தது
42	72	120	158	சீயுதிரமொங்கு	குவலயாபீடத்தை
43	76	132	163	தகரநறுமலர்	கோவர்த்தன கிரியை

கிருஷ்ண லீலா

மருதொடு பொருத. ஆநிரை மேய்த்த அபிராமன்
குடையாகக் கொண்டு பசுக்களைக் காத்தது.
ம தவழ்ந்தது: கோவர்த்தன கிரியைக் குடையாகப் பிடித்தது
பிடித்தது.
கிரியை குடையாகப் பிடித்தது
வென்றவர்; மருதிடை தவழ்ந்தவர்
மருத மரமாக நின்றவர்கள் சாபத்தை போக்கியது
உயிரைப் பலி கொண்டது.
மருதை முறித்தது
உரலொடு உலாவிய கள்வன்.
மருத மரங்களை விழச் செய்த வரதன்.
மாயன்.
கோபாலன்.
தில் றெியது: கோபிகைகளுடன் விளையாடி மகிழ்ந்தது.
அணைந்த மரகத நாராயணன்.
மாதரைப் புணர்ந்தது.
பூமிக்குக் கொணர, தேவர்களோடு போரிட்டு வென்றது.
பூவுலகிற்கு கொணர்ந்தது.
இந்திரனையும் தேவர்களையும் மோகித்து விழச் செய்தது
கோவர்த்தன கிரியை குடையாகப் பிடித்தது
கொணர்றது: கோநிரை புரந்தது.
குடையாகப் பிடித்தது: காளிங்க நர்த்தனம்

	பாடல் எண்				திருப்புகழில்
	இ.வ.	செ.	ம	பாடல்	
44	–	1233	1234	கிஞ்சுகமென	குவலயாபீடத்தை
45	413	1273	1274	முருக மயூர	ஏழு விடைகள்: பூதனை, குவலயா
46	369	1159	1159	சுருதி வெகு முக	நான்கு விடைகள்: மருத
47	–	1004	1001	இலகியிருகுழை	பூதனையை வதைத்தது
48	-	940	936	கலக சம்ப்ரமத்தா	உலக்கையைப் பொடி
49	122	268	248	எலுப்பு நாடிகள்	உலக்கையைப் பொடி
50	அலங்காரம் - 50			படிக்கும் திருப்புகழ்	காளிங்க நர்த்தனம்
51	அந்தாதி - 44			சேதாம் பலதுறை	கயிறால் கட்டுண்டது
52	„ - 54			திதத்தத்	தயிருண்ட கண்ணா
53	வேல்வாங்கு வகுப்பு 28-30			வரை நிரை கன்றின	கோவர்த்தனகிரி, மருதமரம்
54	–	1216	1217	இடையித்தனை	தயிர், நெய், உலகை

திருப்புகழில்

1	5	1	6	முத்தைத் தரு	பகலை இரவாக்கிய
2	—	115	150	குன்றுங் குன்றுங்	பூதனை வதம்
3	-	178	155	சிந்துர கூர	காண்டவ வனத்தை
4	—	245-2	526	நெச்சுப் பிச்சிப்	பீமனைக் காத்தது
5	183	248	529	கரிவாம்பரி (வரி...)	பாரதப் போரில் தேரி
6	—	324	540	அகத்தினைக்	போரில் யாவரும்
7	199	350	568	சீரான கோல	சக்கரத்தால்
8	—	355	573	உருவேறவே ஜெபித்து	துரியோதனாதிகளை

கிருஷ்ண லீலா

அட்டது.

பீடம்; விளாமரம், கொக்கு, மருதமரம், சகடாசுரன், மல்லர்கள்.

மரம்; பூதனை, குவலயா பீடம், சகடாசுரன்

செய்து கடலில் இட்டது; யாதவகுலம் அழிந்தது

செய்து நடுக்கடலில் இட்டவன்.

சகடாசுரன், கொக்கு, பூதனை, குவலயா பீடம். கம்சன்

உண்ட திருமால்.

மகாபாரதம்

பார்த்தசாரதி

பார்த்தனுக்கு சாரதி.

எரித்த அர்ச்சுனனுக்கு சாரதியானது.

காளிங்க நர்த்தனம்

யோதனைதனை அழித்தது; பார்த்தசாரதியானது.

அழிய பகையை மூட்டிய சக்கரபாணி

சூரியனை மறைத்தது

அழித்து பாண்டவர்களுக்கு அரசளித்தது.

	பாடல் எண்				திருப்புகழில்
	கி.வ.	செ.	ம	பாடல்	
9	–	356	574	எதிரெதிர் கண்டோ	விதுரன் போர்
10	426	481	339	கருமமான	பஞ்சபாண்டவர்கட்கு
11	276	751	747	சதுரத்தரை	விதுரர்க்கும்
12	311	756	752	பகையற்ற	அளவற்ற வடிவை
13	241	789	785	வட்டுனை விதிப்படி	பாரத வரலாறு;
14	–	894	890	விகட சங்கட	பகலை இருளாக்கியது
15	–	913	909	குயிலோ மொழி	போர்க்களத்தில்
16	–	928	924	இளநீர்க்குவட்டு	அர்ச்சுனனுக்கு
17	–	932	928	சஞ்சல சரித	பாரத கதைச்
18	–	934	930	குருவு மடியவ	பாதாள அறையில்
19	325	1056	1053	அதல சேடனா	விஜயனது தேர்
20	–	1058	1055	சரிய மவல	நூற்றுவரை அழித்
21	416	1195	1196	மோது மறலி	மகா பாரதச்
22	–	1059	1056	மகளு மனைவியு	புவியின் வேதனையை
23	396	1063	1060	பருதியாய்	துரியோதனாதிகள்
24	போர்க்களத் தலகை வகுப்பு (25.28)			நிகரில் அறம்புரி	பாதாள அறையில்
25	வேல் வாங்கு வகுப்பு			வடவை யிடும்படி	விஜயனுக்கு தேரோ
26	அந்தாதி – 22			செற்றே வரும்	நூற்றுவரை

மகாபாரதம்

செய்யாமல் ஏயும்படி செய்தது; பார்த்தசாரதியானது
புகலாகி, க்ஷத்திரியர்களை அழித்த அர்ச்சுனன் தேர்கடவு அச்சுதன்
துரியோதனனுக்கும் வினைவ உண்டாக்கியது
(சகாதேவனுக்கு) காட்டிய கண்ணபிரான்
பாரதப்போரை நடத்துவித்த மகாவீர மாயவன்.
துரியோதனாதிகளை அழித்தது.
கர்ணனுக்கு தரிசனம் தந்தது.
தேர்ப் பாகன்
சுருக்கம்
விசுவரூபம் எடுத்தது: நூற்றுவரை அழித்தது
விருந்து கனக வேத கோடுதும் மாமாயன்
தது. தூது சென்றது
சுருக்கம்.
மாற்றிய திருமால்
வீர சொர்க்கம் அடைய தேரைச் செலுத்தினது

விசுவரூபம் எடுத்தது: பூபாரம் தீர்த்தது.
டிய சகலரையும் அழித்தது
அழித்தது.

① <u>களபமொழுகிய</u> (இ.வ.— செ: 60; ம: 43)

அளையில் உறை புலி பெறு மகவு, அயில் தரு
பசுவின் நிரை முலை அமுது உண, நிரை மகள்
வசவனொடு புலி முலை உண, மலையுடன் உருகா. நீள்
அடவிதனில் உள உலவைகள் தளிர் விட,
மருளா, மதமொடு களிறுகள் பிடியுடன்
அகல, வெளி உயர் பறவைகள் நிலம் வர விரல் சேர், துழ்
துளைகள் விடு கழை விரல் முறை தடவிய
இசைகள் பலபல தொனி தரு கருமுகில்
சுருதி உடையவன் நெடியவன் மன மகிழ் மருகோனே.

② <u>தொல்லை முதல்</u> (இ.வ: 166. செ: 387. ம: 607)

கல் உருக, வேயின் கண், அல்லல் படு கோ, அம்
புகல் வருகவே நின்று குழல் ஊதும் கையன்

③ <u>நசையொடு தோலுந்</u> (இ.வ: —; செ: 669; ம: 665)

இசையுற வேய் அன்று அசைவற ஊதும்
எழில் அரி

(1) இசைகள் பலபல தொனிதரு கருமுகில் : குழலோசையின் இனிமை

மலைக்குகையில் வாழும் புலி பெற்ற குட்டி. (அயில்தரு) குடிப்பதற்கு பசுவின் முலைப்பால் அமுதை உண்ணவும், (நிரை மகன்) பசுவின் பெண் கன்று (வசவன்) ஆண் கன்றுடன் புலி முலைப்பால் உண்ணவும், மலை அப்படியே உருகவும், நீண்ட காட்டில் உள்ள மரங்கள் தளிர் விடவும், உயிர்கள் யாவும் திகைக்கவும், மதம் கொண்ட ஆண் யானைகள் பெண்யானையோடு ஒரு புறம் செல்ல, ஆகாயத்தில் உயரத்தில் உள்ள பறவைகள் நிலத்தில் வந்து சேரவும், விரல்களை தடவுகின்ற ஏழு தொளைகள் விட்டுள்ள மூங்கில் (புல்லாங்குழலில்) விரல் முறைப்படி தடவினதால் (எழுகின்ற) இசைகளால் பலபல நாதங்களை எழுப்பும் கரிய மேகம் போன்ற கண்ணபிரான் வேதப் பொருளோன், நெடியவன், மனம் மகிழும் மருகோனே.

(2) பசுக்கள் வந்து சேர குழல் ஊதும் கையன்

கல்லும் உருகும்படியாக, மூங்கிலால் அமைந்த, துன்பப்படும் பசுக்கள் அழகிய (புகல்) புகுமிடத்திற்கு வந்து சேரும்படி, நின்று புல்லாங்குழல் வாசித்த கையை உடையவனும் கண்ணபிரான் -
(வேயின் கண் குழல்: மூங்கிலால் அமைந்த புல்லாங்குழல்)

(3) சராசரங்கள் அசைவின்றி நிற்கும்படி குழலூதும் எழில் அரி

இனிய இசை பொருந்தும்படி, முன்பு, சராசரங்களை அசைவின்றி நிற்கும்படி, புல்லாங்குழல் ஊத வல்ல அழகிய கண்ணன் (திருமால்)

④ மாயா சொரூப (இ.வ: — செ: 362; ம: 580)

காயாத பால் நெய் தயிர்க் குடத்தினை
ஏயா எனைமல் எடுத்து இடைச்சிகள்
காதை வாரு குடிக்கும் அப்பொழுது உரலோடே
கார் போல மேனி தனைப் பிணித்து ஒரு
போர் போல (அ)சோதை பிடித்து அடித்திட
காதோடு காது கையிற் பிடித்து அழுது இனிது ஊதும்
வேயால் அநேக விதப் பசுத்திரள்
சாயாமல் மீள அழைக்கும் அச்சுதன்
வீரன மாமன் எனப் படைத்தருள் வயலூரா

⑤ சிவனார் மனங் (இ.வ: 71; செ: 109; ம: 156)

நவநீதமும் திருடி உரலோடே நன்றும் அரி

⑥ உயிர்க்கூடு விடும (இ.வ: — செ: 165; ம: 121)

தயிர் சோரன் எனும் அ உரை வசைக் கோவ வனிதையர்கள்
நரத்து ஆடல் புரியும் அரி மருகோனே

⑦ பெரியதோர் (இ.வ: — செ: 184: ம: 178)

பரியதோர் கயிறு அன்னை கொண்டு வீசவே
உறிய தோய் தயிர் தனை உண்டு நாடியெ
பசியதோ கெட அருள் கொண்ட மாயவன் மருகோனே

(4) <u>பால் தயிர் திருடி, கட்டுண்டு யசோதையிடம் அடிபட்டு அழுதது</u>

காய்ச்சாத பால், நெய், தயிர்க்குடங்களைப் (ஏயா) பொருந்திய மனத்துடன் சற்றேனும் யோசியாமல் எடுத்து, இடைச்சிகளுக்குத் தெரியாதபடி குடித்துக் கொண்டிருக்கும் பொழுது, உரலுடன் மேகம் போன்ற (அவரது) திருமேனியைக் கட்டி, ஒரு போரிடுவது போல யசோதை பிடித்து அடிக்க, அப்போது இரண்டு காதுகளையும் கைகளால் பிடித்துக் கொண்டு அழுதவரும், இனிமையாக ஊதும் புல்லாங் குழலால், பல விதமான பசுக்கூட்டங்கள் தவருதபடி மீண்டு வரும்படி அழைத்தவரும் ஆகிய ~~ஆகிய~~ அச்சுதன் . . .

(5) <u>வெண்ணெய் திருடி உரலோடு கட்டுண்டது</u>

(பால் தயிர் மட்டுமின்றி) வெண்ணெயையுந் திருடி, உரலுடன் பிணித்துக் கட்டப்பட்ட அரி (பாவங்களை அழிப்பவராகிய கண்ணபிரான்)

(6) <u>தயிர் சோரன் என்று வசை மொழிந்த கோபிகா ஸ்திரீகளுடன் ஆடல் புரியும் அரி</u>

தயிரைத் திருடினவன் என்று நிந்தை மொழியைச் சொன்ன கோபிகா ஸ்திரிகளிடம் விளையாடல் புரிந்த கண்ணபிரான்

(7) <u>தயிரை உண்டு பசி நீங்கிய மாயவன்</u>

பருத்த கயிறு கொண்டு, தாயான யசோதை, வீசிக் கட்ட, உறியில் தோய்ந்திருந்த தயிரை விரும்பி உண்டு, பசி நீங்குமாறு அருள் பூத்த கண்ணபிரான்

(8) நாமேவு குயிலாழு (இ.வ:— செ:411; ம:629)

தாம் மோகமுடன் உறுபால் தேடி உரலூடு
 தான் ஏறி விளையாடும் ஒரு போதில்
தாயாக வரு சோதை காணுது களவாடு
 தாமோதரன் முராரி மருகோனே.

(9) காலமுகிலென (இ.வ:— செ:736; ம:731)

வேலை தனில் விழி துயில்பவன், அரவணை,
 வேயின் இசையது நிரைதனில் அருள்பவன்
 வீர துரகத நரபதி, வனிதையர் கரமீதே
வேறு வடிவு கொடு உறி வெணெய் தயிரது
 வேடை கெட அமுதருளிய பொழுதினில்
 வீசு கயிறுடன் அடிபடு சிறியவன் . . .

(10) வேனின் மத (இ.வ:—. செ:974. ம:970)

ஆனிரை துரந்து மாநிலம் அளந்து ஒரு
 ஆலிலையில் அன்று துயில் மாயன்
ஆயர் மனை சென்று பால் தயிர் அளைந்த
 ஆரண முகுந்தன் மருகோனே.

(11) சிற்றுயக்கூட்ட (இ.வ:—; செ:1022; ம:1019)

மத்தோசைப் போக்கிற றயிர், உறி
 நெய்ப்பாலுக்கு ஆய்ச்சிக்கு இருபதம்
 வைத்து அடிக்காட்டிப் பருகு அரி மருகோனே

(8) கறந்த பாலைக் களவாடு தாமோதரன்

தாம் ஆசையோடு, கறந்த பாலைத் தேடி, உரலுடன் ஏறி
விளையாடின ஒரு பொழுதில், தாயாக வந்த யசோதை
காணுவண்ணம் பாலைத் திருடிய தாமோதரன், முராரி எனப்
படும் திருமாலின் மருகனே.

(9) குழலூதும் பார்த்தசாரதி, வெண்ணெய் தயிர் உண்டு அடிபடு சிறியவன்

கடலில், ஆதிசேடனும் பாம்பணையில், கண் துயில்பவன், புல்லாங்
குழலின் இசை கொண்டு பசுக்கூட்டங்களுக்கு அருள் புரிபவன்
(பார்த்த சாரதியாய்) வீரமுள்ள குதிரைகளைச் செலுத்தின
(நர) அர்ச்சுனனுக்குக் குரு, மாதர்களின் கையால்
கள்ள வேடம் பூண்டு, உறியில் இருந்த வெண்ணெய், தயிர்
இவைகள் உண்ணும் (வேடை) வேட்கை-தாகம் தீர அமுதைப்
பங்கிட்டு அருளின சமயத்தில், எறியப்பட்ட கயிற்றால்
அடிபட்ட சிறியவன்

(10) ஆலிலையில் துயில் மாயன்; பால் தயிர் அளைந்த முகுந்தன்

பசுக்கூட்டங்களை ஓட்டிச் செலுத்தியும், பெரிய பூமியை (திருவடி
கொண்டு) அளந்தும், ஒரு ஆலிலையில் (ஊழி) அன்று துயில்
கொண்டவனுமான மாயன், இடையர் வீடுகளிற் போய்ப் பாலை
யும், தயிரையும் கலந்து பருகின, வேதம் போற்றும் முகுந்தன்

(11) யசோதையின் முன் கூத்தாடி பால் தயிர் பெற்று உண்ட அரி

மத்தின் ஓசை செல்லும் போக்கை (திசையை) அறிந்து, உறியில்
உள்ள தயிர், நெய், பாலுக்கு - அவை வேண்டி - தாயாகிய யசோ
தையின் முன்னிலையில், இரண்டு திருவடிகளைக் கொண்டு
கூத்தாடித் தனது ஆடல்களைக் காட்டி, அந்தத் தயிர், நெய் பால்
பெற்று உண்ட அரி

(12) நேசா சாரா டம்பர (இ.வ: – ; செ: 408 ; ம: 626)

பேசாதே போய் நின்று உறியிற் தயிர்
வாய் ஆ ஆ ஆ என்று குடித்து அருள்
பேராலே நீள் கஞ்சன் விடுத்து எதிர் வருதூது
பேழ் வாய் வேதாளம் பகடைப் பரு
வாய் நீள் மானும் சரணத்தொடு
பேய் ஆனை போர் வென்று எதிர் இட்டவன மருகோனே.

(13) நடையுடையிலே (இ.வ: – ; செ: 1101 ; ம: 1098)

இடையர் மனை தோறு நித்தம் உறி தயிர் நெய் பால் குடிக்க
இருகையுறவே பிடித்து உரலோடே
இறுகிட அசோதை கட்ட அழுதிடு கோபால கிருஷ்ண
னியல் மருகனே . . . .

(14) பரதவித புண்டரிக (இ.வ: – ; செ: 1172 ; ம: 1173)

. . . . . உறி தாவும்
அருகளவு கண்டு தனி கோபத தாயக்குல
மகளிர் சிறு தும்பு கொடு மோதிச் சேர்த்திடும்
உரலொடு தவழ்ந்த நவநீதக் கூற்றனும்

(15) ஊனும் உட்பிணி (இ.வ: 265 ; செ. 985 ; ம: 981)

மால் நாக துத்தி முடி மீதே நிருத்த மிடு
மாயோனும் . . .

(12) <u>தயிரை ஆஆஆ என்று உண்டது: பூதனையை வதம் செய்தது</u>

மௌனமாகப் போய் நின்று, உறியிலிருந்த தயிரை எடுத்து, வாயால் ஆஆஆ என்று குடித்து அருளியும், எங்கும் புய பலத்தால் புகழ் பெற்ற கம்சன் விடுத்த தூது போல் எதிர் வந்த, பெரிய வாயை உடையவளும், பூதம் போன்ற பெரிய சரீரத்தை உடையவளும் (பகைப் பகுவாய்) இடம்பமாகப் பேசிக்கொண்டு வந்த அகன்ற வாயை யுடையவளும், நீண்ட பெண்ணுருவத்தைக் கொண்டவளும், தடையின்றி வந்தவளுமாகிய, பூதகியின் (வஞ்சனைப்) போரை செயித்து எதிர் நின்றவனாகிய கண்ணபிரானது மருகோனே.

(13) <u>தயிர், நெய், பால் குடித்து கட்டுண்டு அழுத கோபாலகிருஷ்ணன்.</u>

இடையர்களின் வீடுகள் தோறும், தினந்தோறும், உறியில் உள்ள தயிரையும், நெய்யையும், பாலையும் குடிக்க, கண்ணனுடைய இரண்டு கைகளையும் பற்றிப் பிடித்து உரலுடனே அழுத்தமான வகையில் யசோதை கட்ட, அப்பொழுது அழுத கோபாலகிருஷ்ணனும் திருமாலின் உழுவலன்புக்கு உரிய மருகனே

(14) <u>உறிதாவு கள்வன்; உரலொடு தவழ் நவநீத கிருஷ்ணன்.</u>

உறி மீது தாவின. ஒரு திருட்டுத் தனத்தைக் கண்டு, ஒப்பற்ற (மிகுந்த) கோபம் கொண்ட, ஆய்க்குல பெண்கள், சிறிய கயிறு கொண்டு, மோதிக் கட்டி வைத்த உரலுடன் தவழ்ந்த, வெண்ணெய் உண்டவன் என்னும் பேச்சுக்கு இடம் தந்தவனும்

(15) <u>காளிங்க நர்த்தனம்</u>

காளிங்கன் என்னும் பெரிய பாம்பின் புள்ளிகள் உள்ள படத்தின் மேலே நடனம் செய்த திருமாலும்.

(16) நெச்சுப் பிச்சிப் (இ.வ: — ; செ: 245.2 ; ம: 526)

விடத்தை உடைத்த படத்தினில்

நட நவில் . . . . நரகரி உரு திரு மருகோனே

(17) மாந்தளிர்கள் (இ.வ: — ; செ: 402 ; ம: 620)

பாந்தண் முடி மீது தாந்த திமி தோதி

தாஞ்செ கண சேசெ எனநசை

பாங்கு பெறு தாளம் ஏங்க நடமாடு

பாண்டவர் சகாயன் மருகோனே.

(18) சொற்பிழை வராமே (இ.வ: — ; செ: 852 ; ம: 848)

எற்பணி அரானை மிதித்து வெட்டித் துவைத்து

பற்றிய கரானை . . . .

எத்திய பசாசின் முலைக் குடத்தைக் குடித்து

முற்று(உ)யிராமல் அடக்கி விட்டுச் சிரித்த

அயிற் கண்ணி ராமர்

(19) மடலவிழ் சரோருக (இ.வ: — ; செ: 1102 ; ம: 1099)

தட மகுட நாகரத்ந பட நெளிய ஆடி, பத்ம

சரண யுக மாயனுக்கு மருகோனே.

(20) குடங்கள் நிரைத் (இ.வ: — ; செ: 885 ; ம: 881)

விடங்கள் கதுப்பெறு படங்கணடித்தாட

விதங்கொள் முகுற யாய வுறைமாயன்

(16) காளிங்க நர்த்தனம்

நஞ்சையுடைய காளிங்கன் என்னும் பாம்பின், பணமகுடத்தின் மீது நின்று நடனம் புரிந்த . . .

(17) காளிங்கன் மீது தாளத்தோடு நடமாடும் பாண்டவர் சகாயர்.

பாம்பின் முடியின் மேல் 'தாந்த திமி தோதி தாஞ்செ கண சேசெ' என்ற ஓசையை அழகாகத் தருகின்ற தாளம் ஒலிக்க நடனம் செய்த பாண்டவர் துணைவனாம் கண்ணபிரான்

(18) காளிங்கனை வெட்டித் துவைத்தது; பூதனையை வதம் செய்தது

(வல்) நஞ்சு பொருந்திய நாகப் பாம்பை, (காலின் கீழ்) மிதித்து வெட்டித் துவைத்து . . .

வஞ்சனை எண்ணத்துடன் வந்த பூதனையின் முலைக்குடத்தைக் குடித்து, முழுதும் உயிர் இல்லாத வகையில் அந்தப் பிசாசை அடக்கி விட்டுச் சிரித்த . . .

(19) காளிங்க நர்த்தனம்

விசாலமான முடிகளைக் கொண்ட நாகரத்னம் உள்ள (காளிங்கன் என்னும் பாம்பின்) படம் நெகிழ உற நடமாடின தாமரையன்ன (யுக சரணம்) இரண்டு திருவடிகளைக் கொண்ட மாயனுக்கு மருகோனே.

(20) காளிங்க நர்த்தனம்

விஷம் கவுளில் (கன்னத்தில்) ஏறக் (காளிங்கனது) படத்தின் மீது ஆடி நடிக்கும் அத்தகைமை கொண்ட சிறந்த சர்ப்ப சயனப் பாயலிற் பள்ளி கொள்ளும் மாயவன்

(21) தும்பிமுகத்தானை (கி.வ: — செ: 868 : ம: 864)

கொம்பு குறிக் காளை மடுத் திறந்தும் என உற்றடி நிரைக்
கொண்டு வளர்த்தே மகிழ் அச்சுதன்

(22) முருகுலாவிய (கி.வ: — செ: 1012 : ம: 1009)

அரி அராவின் முடிமிசை நடமிடு
பரத மாயவன் . . . .
மருதொடு பொருதவன், வேயிசை கொடு
நிரை பரவிடும் அபிராமன்

(23) பொன்றுமன (கி.வ: — செ: 678 : ம: 674)

குன்றல் விண் டாழ்க்கும் குடை கொடு
கன்று முன் காத்துங் குவலயம்
உண்டார் கொண்டாட்டம் பெருகிய மருகோனே

(24) குருவுமடியவரடி (கி.வ: — ; செ. 934 . ம: 930)

உருவு பெரு(க)அயல் கரியதொர் முகிலெனும்
மருது நெறிபட முறைபட வரைதனில்
உரலினொடு தவழ் விரகுள இளமையு மிகமாரி
உமிழ நிரைகளின் இடர் கெட அடர் கிரி
கவிகை யிட வல மதுகையு நில கெட
உலவில் நிலவறை உருவிய அருமையும் ஒருநூறு
நிருப ரணமுக அரசர்கள் வலிதப
விசயன் ரதமுதல் நடவிய எளிமையும்
நிகில செகதலம் உரை செயும் அரி திரு மருகோனே

(Pl see (18) page 39)

(23) பருதியாய் (கி.வ. 396. செ. 1063. ம. 1060)

திருதராட்டிரன் உதவு நூற்றுவர்
சேண் நாடு ஆள்வான் நாள் ஓர் மூவாறினில் விழத்
திலகு பார்த்திபனும் உலகு காத்தருள்
சீராமாறே தேரூர் கோமான் மருகோனே.

---

(9) போர்க்களத் தலகை வகுப்பு (25-28)

(24) நிகரில் அறம்புரி குருகுல பஞ்சவர் மெய்த் தூதுக்கொரு
நிமிட மதில் அன்று போய், கவித்த மணிமுடி
நிருபர் பயங்கொள நெறு நெறெனும்படி பொற் பீடத்திடை
நிலை பெற இருந்து நூற்றுவர்க்கும் அவர் அறி
நினைவுற வன்பு உறும் ஒரு பதினொண்குண அக்ரோணிப்படை
நிகிலமு மடிந்து கூற்றுவற்கு நிறைவுற
நிலமகள் வன்பொறை கடியு முகுந்தன் முதல் சேண்முட்டவு
நெறிபட நிமிர்ந்த ஆக்கையற்கு மருமகன்

(14) வேல் வாங்கு வகுப்பு (25-26)

(25) வடவை யிடும்படி மணிமுடி பஞ்செழ விஞ்சிய
மாடு ஆம்புடை நாடு ஆண்டவை
வசைகருதும் குரு பதியொடு தம்பியரும் படவே
பாண்டவர் தேரூர்ந்தவன்

உலகத்தையே அளந்துமூடின திருவடியையுடையவரும், கருடனை வாகனமாகக் கொண்டவருமான சிறப்புற்ற மாயன் (திருமால்)

(20) நூற்றுவரை அழித்தது; தூது சென்றது

(விகட) பரந்த கிரீடங்கள் அணிந்த அரசர்கள் யாவரும், துரியோதனாதி நூற்றுவரும், அர்ச்சுனன் ஒருவனாலே அழிவுறச் செய்தவரும், (பாண்டவர்க்கு) ஒப்பற்ற தூதுவராகச் சென்று உழன்ற ஒப்பற்ற பராக்ரமசாலியான திருமாலின் மருகனே

(21) மகாபாரதச் சுருக்கம்

சூதாடின தருமன் நாடிழந்து, 12 வருடம் வனவாசம் செய்து, மயிலனைய துரோபதையுடன், விராட ராச்சியத்தில் உறையும் பொழுது பசுக்களை துறையாடிப் போக, எதிர் சென்று அப்பசுக்களை மீட்டு, ஆட்சியைத் தருமாறு கேட்க ஒப்புற்ற தூதை அனுப்ப, போருக்கு உரிய வலிய ஆண்மையொடு நாகத்தில் ஒழிய அரசுரிமை தரேன் எனத் துரியோதனன் கூறத் - தூதினின்று மீளவும், தாக்கித்துப் போருக்கு வந்த துரியோதனாதிகளும் பிறரும் மாள, பிற அரசர்களுடன் சேனைகள் எல்லாம் தூளாக, (வரிசாப) கட்டப்பட்ட வில்லினை வரும் வெற்றியைக் கொண்ட விஜயனுடைய, வலிமை மிக்க குதிரைகள் பூட்டிய தேரை செலுத்தின பெரிய திருமால், பராக்ரமம் பொருந்திய மாயன் மருகனே.

(22) புவியின் வேதனையை மாற்றிய திருமால்

சொலற்கரிய போர் வில்லை உடையவனும், சாமார்த்தியம் உள்ளவனுமான அர்ச்சுனனைக் கொண்டு, புகழுடைய துரியோதனாதியர்களுடைய குதிரைகள், யானைகள், தேர்கள், சேனைகள் யாவும் மடிய, அவர்களுடைய அரசாட்சியைத் தொலைத்து, சிறந்த இப்பூமியின் துக்கத்தை - வேதனையை நீக்கினவராகிய திருமாலின் மருகனே.

(21) காளிங்க நர்த்தனம்; ஆநிரை மேய்த்த அச்சுதன்

உனது கொம்பை (புல்லாங்குழலை) குறி (தனக்கு) அடையாளமா கக் கொண்டு, விஷம் நிரம்பின மடு நடுவில் திந்தம் என்று நடனம் செய்தவனும், (நிரை) பசுக்கூட்டங்களை ஒன்று கூட்டி வளர்த்து ஓட்டி மகிழ்ந்தவனுமான

(22) காளிங்க நர்த்தனம்; மருதொடு பொருத, ஆநிரை மேய்த்த அபிராமன்

கோடுகளை உடைய காளிங்கன் என்னும் பாம்பின் முடி மீது நடனம் செய்யும் கூத்தில் வல்ல பிரான், . . .

மருத மரங்களைச் சாடினவன், புல்லாங்குழலின் இன்னிசையாலே பசுக்கூட்டத்தைப் பரிபாலித்த அழகன்.

(23) கோவர்த்தன கிரியை குடையாகக் கொண்டு பசுக்களை காத்தது

மலையை (விண்) மேகங்களைத் தடுக்கும் குடையாகக் கொண்டு கன்றுகளையும் பசுக்களையும் முன்பு காத்தவரும், பூமியை உண்டவருமான திருமாலின் பாராட்டு மிக்குள்ள மருகனே.

(24) மருது நெறிபட உரலொடு தவழ்ந்தது; கோவர்த்தன கிரியை குடையாகப் பிடித்தது

உருவம் பெரியதாய், (அயல்) பக்கத்திலிருந்த கரிய ஒரு மேகம் போன்ற மருத மரம் (தாம் செல்லும் வழியில்) ஒடி பட்டு விழ, (முறைபட) அதனால் நீதி வெளிப்பட, மலை போன்ற உரலினுடன் தவழ்ந்து சென்ற சாமர்த்தியம் கொண்ட இளமை அழகையும் நிரம்ப (மாரி) மழை பொழியப், பசுக்கூட்டங்களின் துயர் நீங்க, நெருங்கிய (கோவர்த்தன) மலையைக் (கவிகை) குடையாகப் பிடிக்க வல்ல (மதுகையும்) வலிமையையும் . . .

எல்லாப் பூமிகளும் புகழ்ந்து உரைக்கும் திருமாலின் திரு மருகனே

(25) சந்தனம் பரிமள (இ.வ:— செ:774. ம:770)

மந்தரங் குடை யென நிரை யுறு துயர்
சிந்த அன்று அடர் மழை தனில் உதவிய
மஞ்செனும்படி வடிவுறும் அரிபுகழ் மருகோனே.

(26) அரவியென வடவை (இ.வ:— செ:145 : ம:116)

நிரை பரவி வர வரையுள், ஓர் சீத மருதிடைடு
பொரு சகடு உதையது செய்து, ஆ மாய மழை சொரிதல்
நிலகுலைய மல குடையதாவே கொள் கர கமலன் மருகோனே

(27) மருமலரினன் துரந்து (இ.வ:— செ:143; ம: 181)

கஞ்சன் வர விடு மெல் வஞ்சகங்கள்
செறிவுடன் அறிந்து வென்ற பொறியாளர்
பரிவொடு மகிழ்ந்து இறைஞ்சு மருதிடை தவழ்ந்து நின்ற
பரமபத நண்பர் அன்பின் மருகோனே.

(28) கச்சணி யிள (இ.வ:— செ:279; ம: 253)

சொச்சையர் மனையில் இடைச்சியர் தயிர் தனை
நச்சியே திருடிய குறையால் வீழ்
குற்கிர வினியொடு நற்திற வகை அறி
கொற்ற உவணமிசை வரு கேசன்
அசுதை நிறை கடல் நச்சு அரவணை துயில்
அச்சுதன் மகிழ் திரு மருகோனே

(25) மலையைக் குடையாகப் பிடித்தது

மந்தர மலையைக் குடையாகப் பிடித்து பசுக்களுக்கு உற்ற துயர் ஒழியும்படி அன்று அடர்ந்த மழையில் உதவி புரிந்த திருமால். மேகம் என்னும்படியான நிறம் கொண்ட அரி . . .

(26) சகடு உதை செய்தது; கிரியை குடையாகப் பிடித்தது.

பசுக்கள் கூட்டமாய் வர, மலை நிழலிலே, ஒப்பற்ற குளிர்ச்சி தரும் மருதமரத்தையும், போர் புரிந்து கொல்லும் பொருட்டு வண்டி யுருவமாய் வந்த சகடாசுரனையும் உதைத்துக் கொன்றவரும், பசுக்கள் மாயுமாறு பெருமழை சொரியுந்தன்மை கெட்டொழியுமாறு கோவர்த்தன கிரியை குடையாகப் பிடித்த தாமரையன்ன திருக்கரங்களையுடையவனாகிய கண்ணபிரானது

(27) கம்சனின் வஞ்சகங்களை வென்றவர்; மருதிடை தவழ்ந்தவர்.

கம்சன் அனுப்பின நய வஞ்சகச் சூழ்ச்சிகளை கூர்மையாக உணர்ந்து அவைகளை வெற்றி பெற்ற அறிவாளரும், அன்புடன் மகிழ்ந்து வணங்கும் மருத மரங்களின் இடையே தவழ்ந்து சென்றவரும், பரமபதத்தில் இருக்கும் நண்பருமான திருமால்

(28) கட்டுண்ட உரலோடு சென்று, மருத மரமாக நின்றவர்கள் சாபத்தைப் போக்கியது

இடையர் மனையில் இடைச்சியர் தயிரை விரும்பித் திருடிய குறையினால், விழுந்து கிடந்த (குற்கிர வினியொடு) உரலோடு சென்று, (மருத மரங்களாக நின்றவர்கள் சாபத்தை அறிந்து போக்கிய) நல்லதொரு பாக்கியச் செய்கையை அறிந்து செய்த வீரமுள்ள கருட வாகனத்தில் வரும் கேசவன் . . .

(29) திருவினையஞ்ச வருவினை (இ.வ:249 செ:855; ம:851)

மருதொடு கஞ்சன் உயிர் பலி கொண்டு
மகிழ் அரி விண்டு மருகோனே

(30) குருதி கிருமிகள் (இ.வ:303; செ:912; ம:908)

மருது நெறு நெறு நெறுவென முறிபட
உருளு முரலொடு தவழ் அரி மருக ...

(31) வதன சரோருக (இ.வ:315; செ:668; ம:664)

கதை, கனசாப, திகிரி, வளை, வாளொடு கைவசிவித்த நந்த
கோபால மகிபன் தேவி மகிழ்ந்து வாழக்
கயிறொடு உலூகலம் உருள உலாவிய கள்வன் | அறப் பயந்து
ஆகாய கபாலம் பீற நிமிர்ந்து நீள ...

(32) சருவியிகழ்ந்து (இ.வ.234; செ:775; ம:771)

இந்திரை கணவன், அரங்க முகுந்தன், வரும் சகடு அற மோதி
மருது குலுங்கி நலங்க முனிந்திடு
வரதன் அலங்கல் புனைந்தருளும் குறள் வடிவன்

(29) மருத மரம், கம்சன் உயிரைப் பலி கொண்டது

மருத மரம் கம்சன் - இவர் தம் உயிரைப் பலி கொண்டு (மாய்த்து) மகிழ்ந்த அரி- திருமாலின் மருகனே.

(30) உரலுடன் சென்று மருதை முறித்தது

மருத மரம் நெறு நெறு நெறு என்று முறியும்படி, உருண்டு சென்ற உரலுடனே தவழ்ந்து சென்ற கண்ணபிரான்

(31) பஞ்சாயுத பாணி- உரலொடு உலாவிய கள்வன்

(கௌமோதகி என்னும்) கதையையும், பெருமை பொருந்திய (சாரங்கம் என்னும்) வில்லும், சுதர்சனம் என்னும் சக்கரமும், (வளை) பாஞ்ச சன்னியம் என்னும் சங்கமும், நாந்தகம் என்னும் வாளும், கையில் தாங்க வைத்த, நந்தகோபால மகீபன் என்னும் (கோகுலத்து) அரசனது தேவி யசோதை மகிழ்ந்துவாழ கயிற்றினல் உரலொடு கட்டப்பட்டு, அந்த உரலை இழுத்து உருள உலாவின, வெண்ணெய், தயிர் திருடி உண்டவன் / (கண்டவர்கள் மிகப் பயப்படும்படி ...

(32) சகடாசுரனை அழித்து, மருத மரங்களை விழச் செய்த வரதன்

இலக்குமி கணவன், ஸ்ரீரங்கத்தில் பள்ளி கொண்டிருக்கும் முகுந்தன், தன்னைக் கொல்ல வந்த அசுரன் மாளும்படி வண்டியை உதைத்து மோதினவன், மருத மரம் குலுங்கி நொந்து வேகக் கோபித்த வரதன், மாலை சூடியருளும் வாமன மூர்த்தி

(33) <u>தொடத்துளக்கிதள்</u> (இ.வ: — செ: 267 ; ம. 276)

பகைத்த அரக்கர்கள் யமன் உலகு உற, அமர்
தொடுத்த சக்கிர வளைகரம் அழகியர்
படிக்கடத்தையும் வயிறு அடை நெடியவர் மருகோனே

(34) <u>அனித்தமான</u> (இவ: 441. செ: 497. ம: 355)

தொனித்த நாத வேய் ஊது சகஸ்ர நாம, கோபால
சுதற்கு நேச மாருத மருகோனே

(35) <u>வஞ்சனை மிஞ்சிய</u> (இ.வ: — செ: 111. ம: 193)

கஞ்சன் விடு சகடாசுரன் பட
வென்று, குருந்தினிலேறி மங்கையர்
கண்கள் சிவந்திடவே கலந்து அரு முறையாலே
கண்டு மகிழ்ந்து அழகாய் இருந்து, இசை
கொண்டு விளங்கிய நாளில் அன்பொடு
கண்குளிரும் திருமால் மகிழ்ந்து அருள் மருகோனே

(36) <u>விடமத வேள் வாளி</u> (இ.வ: — ; செ: 583 ; ம: 442)

வடகுல கோபாலர் தம் அரு பதினாயிரம்
வனிதையர் தோள் தோய் தரு அபிராம
மரகத நாராயணன் மருமக . .

(37) <u>மாலினையெடுத்த</u> (இ.வ: 320 . செ: 786 ; ம: 782)

காம பாணம் அட்ட அநந்த கோடி மாதரைப் புணர்ந்த
கான ஏறு கார்த்தன் எந்தை அருள்பாலா

(33) உலகை உண்ட மாயன்

பகைத்து வந்த அசுரர்கள் யமலோகத்தை அடையும்படிப் போர் செய்த சக்கரம், சங்கு ஏந்திய திருக்கரத்து அழகர் பூமியாகிய பாண்டத்தை வயிற்றில் அடக்கிய நெடியவர் . . .

(34) சகஸ்ர நாம கோபாலன்

நன்றாக ஒலிக்கின்ற இனிய நாதத்துடன் கூடிய புல்லாங்குழல் ஊதுகின்றவரும், ஆயிரம் நாமங்களையுடையவரும், நந்த கோபாலனுடைய புதல்வருமாகிய திருமால்

(35) சகடாசுரன் வதம்; குருந்தில் ஏறியது, கோபிகைகளுடன் விளையாடி மகிழ்ந்தது

கம்சன் விடுத்த சகடாசுரன் மாளும்படி வென்று, குருந்த மரத்தில் ஏறி, கோபிகைகளின் கண்கள் சிவக்கும்படி அவர்களுடன் ஊடாடி, அரிய வகைகளால் (அவர்களைப்) பார்த்தும், மகிழ்ந்தும் அழகாய் உடன் இருந்தும், இசை பாடி விளங்கிய நாள்களில் அவர்கள் மீது அன்புடன் கண் குளிர்ந்த திருமால் . . .

(36) பதினாறாயிரம் மாதர்களை அணைந்த மரகத நாராயணன்

வடக்கே கோபாலர் குலத்தவரான (இடையர்) ஒரு பதினாறாயிரம் மாதர்களின் தோள்களை அணைந்த அழகிய பச்சை நிற நாராயணனின் மருமகனே.

(37) கண்ணன் கோடி மாதரைப் புணர்ந்தது

மன்மதனுடைய பாணம் வருத்தினதால் (கணக்கிலாத) பல கோடி மாதர்களைப் புணர்ந்த காளையாகிய திருமாலாம் (விடை) மேல் ஏறின தலைவன். [நரகாசுரனால் சிறை வைக்கப்பட்டிருந்த பதினாறாயிரம் கன்னிகைகளையும் விடுவித்து கண்ணபிரான் மணந்து கொண்டார்)

(38) <u>வரைத் தடங் கொங்கை</u> (இ.வ:- செ: 15 : ம: 20)

செருக்கு எழுந்து உம்பர் சேனை
துளக்க வென்று அண்ட முடி
தெழித்திடும் சங்க பாணி மருகோனே

(39) <u>குந்த வார் குழல்</u> (கி.வ:- செ: 889 : ம: 885)

இந்த்ர தாருவை ஞால மீதினிற் கொணர்ந்த
சங்க பாணியன் ஆதி கேசவ ப்ரசங்கன்
என்று வாழ் மணி மார்பன் வீர விக்ரமன் றன் மருகோனே

(40) <u>வேலை வாளைக் கொடிய</u> (கி.வ:- செ: 1279 ; ம: 1280)

வான் உலோகத்தில் அமரேசன் ஓலிக்க வளை
யூதி மோகித்து விழ அருணர் கூறும்
நீல மேனிக்கு மருகா . . .

(41) <u>பொருத கயல் விழி</u> (கி.வ:- செ: 1182 ; ம: 1183)

மருது பொடிபட உதைத்திட்(டு) ஆய்ச்சேரி
மகளிர் உறிகளை உடைத்துப் போட்டவர்
மறுக ஒரு கயிறு அடித்திட்(டு) ஆர்ப்புற அழுதாரும்
வளரு நெடு முகில் எதிர்த்துக் காட்டென
அசுரன் இரணியன் உரத்தைப் பேர்த்தவன்
மழையினிரை மலையெடுத்துக் காத்தவன் மருகோனே

(38) பாரிஜாத மரத்தை பூமிக்குக் கொணர, தேவர் சேனையோடு போரிட்டு வென்றது

போருக்கு எழுந்து தேவர் சேனை கலக்கும்படியாக வென்று வான உலகில் சிறந்து நின்ற, சங்கமேந்திய கையை உடைய கண்ணபிரானின் மருகோனே.

பாரிஜாத விருக்ஷத்தைப் பூவுலகிற்கு கொணர்ந்தது

இந்த்ரலோகத்துக் கற்பக விருக்ஷத்தைப் பூமிக்குக் கொண்டு வந்த (பாஞ்சசன்னியம் என்னும்) சங்கத்தைக் கையில் ஏந்தியவன் ஆதி கேசவன் என்னும் ப்ரகியாதி பெற்றவன் (என்று) சூரியனு டைய ஒளி போன்ற ஒளி தங்கி விளங்கும், கவுத்துவம் என்னும் மணியை மார்பில் அணிந்துள்ளவன், வீர பராக்ரமன் - ஆகிய திருமாலின் மருகனே.

(40) சங்கத்தை ஊதி இந்திரனையும் தேவர்களையும் மோகித்து விழச்செய்து

விண்ணுலகில் தேவர் தலைவனும் இந்திரன் ஓலமிட, சங்கத்தை எடுத்து ஊதி, அந்த நாதத்தால் தேவர்கள் யாவரும் மயங்கி விழ. அருள் மிகுந்துள்ள நீலநிற மேனிப் பெருமானும் கண்ணபிரான்

(41) மருத மரத்தை முறித்தது : கோவர்த்தன கிரியை குடையாக பிடித்தது

மருத மரம் பொடிபட உதைத்தவர்; ஆயர் சேரியில் இருந்த மகளிருடைய உறிகளை எல்லாம் உடைத்துப் போட்டவர். கலங்கும்படி நரு கயிற்றினால் அடிபட்டுக் கட்டுண்ண அழுதவர்; பெருகி வளர்ந்த நெடிய மேக வண்ணர்; எதிரில் காட்டு பார்க்க லாம் என்று (தூணை மோதின) அவுணன் இரணியன் மார்பைப் பிளந்தவர்; மழை பொழிந்த பொழுது - பசுக்கூட்டத்தை - கோவர்த்தனகிரியை குடையாக எடுத்துப் பிடித்து காத்தவர் ஆகிய திருமாலின்..

(42) **சீயுதிரமெங்கு** (இ.வ: 72; செ: 120; ம: 158)

மாயை வல கஞ்சனை விட வெகுண்டு
பார் முழுதும் அண்ட கோளமு நடுங்க
வாய் பிளிறு நின்று மேக நிகர் தன்னை அதனாலே
வாரி உற அண்டி வீறெடு முழங்கு
நீரை நுகர்கின்ற கோபமொடு எதிர்ந்த
வாரண இரண்டு கோடொடிய வென்ற நெடியோனும்
வேயின் இசை கொண்டு கோ நிரை புரந்து
மேயல் புரி செங்கண் மால் மருக

(43) **தகர நறுமலர்** (இ.வ: 76; செ: 132; ம: 163)

சிகர குடையினில் நிரை வர இசை தெரி
சதுரன், விதுரன் இல் வருபவன், அரியது
திருடி அடிபடு சிறியவன் நெடியவன் மதுசூதன்
திகிரி வளை கதை வசி தநு உடையவன்
எழிலி வடிவினன், அரவு பொன் முடி மிசை
திமித திமி திமி யென நடமிடும் அரி மருகோனே.

(44) **கிஞ்சுகமென** (இ.வ: — செ: 1233; ம: 1234)

கஞ்சன் வர விட்ட துட்ட குஞ்சர மருப்பு நசித்த
கங்கனும் . . .

(42) குவலயாபீடத்தை கொன்றது ; கோநிரை புரந்தது

மாயையில் வல்ல கம்சனால் விடப்பட்டு. கோபமுடன் வந்து. உலக முழுவதும், அண்ட கோளமும் நடுங்கும் படியாய், வாய் பிளிறு வந்து, மேகம் போன்ற கறுத்த தன் துதிக்கையால் (எல்லா வற்றையும்) வாரும்படியாக நெருங்கி. கர்வத்துடன் முழக்கமிட்டு நீரையுண்ணும், கோபத்தோ டெதிர்ந்த (குவலயா பீடம்) என்னும் யானையின் இரண்டு கொம்புகளை ஒடிய வென்ற நெடியோனாகிய திருமாலின், புல்லாங்குழலின் இன்னிசை கொண்டு பசுக் கூட்டங்களைக் காத்து மேய விட்ட செங்கண் மாலின் மருகனே.

(43) கோவர்த்தன கிரியை குடையாகப் பிடித்தது ; காளிங்க நர்த்தனம்

(கோவர்த்தன) கிரியாம் குடையின் கீழே பசுக்கூட்டம் வந்து சேர குழல் இசையைக் காட்டிய சமர்த்தன் ; விதுரனுடைய வீட்டுக்கு (உகந்து) வந்தவன் ; வெண்ணெய் திருடி அடிபட்ட சிறியவன், (திரிவிக்ரம ரூபம் கொண்ட) பெரியவன், மது என்னும் அசுரனைக் கொன்றவன் ; சக்கரம், சங்கு, கதை, வாள், வில் என்னும் பஞ்சா யுதங்களை யுடைய மேக வடிவினன், (காளிங்கன் என்னும்) பாம்பின் அழகிய முடியின் மீது திமித திமி திமி என நடனம் செய்த வன் - ஆகிய திருமாலின் மருகோனே.

(44) குவலயாபீடத்தை அட்டது

கம்சன் அனுப்பின துஷ்டத்தன முள்ள, குவலயா பீடம் என்னும் யானையின் தந்தத்தை முறித்த, (தங்கனும்) கருடனை (வாகனமாகக்) கொண்ட திருமாலும்

(45) முருகமயூர (கி.வ. 413. செ: 1273. ம: 1274)

மருகன் எனமேல் சூழ் கொலை கருதிய மாமப் பாதகன்
வரவிடு மாயப் பேய் முலை பருகா, மேல்
[2] வரு மத யானைக் கோடவை திருகி, [3] விளாவிற் காய்கனி
மதுகையில் வீழச் சாடி, அ[4] சத மர புன்
பொருது, [5] இரு கோரப் பாரிய மருதிடை போய், அப்போது [6] ஒரு
சகடு உதையா, [7] மற்போர் செய்து விளையாடி
பொதுவியர் சேரிக்கே வளர் புயல் மருகா

(46) சுருதி வெகுமுக (கி.வ: 369: செ: 1159; ம: 1157)

மருது நெறு நெறென மோதி வேரொடு,
கருதும் அலகை முலை கோதி, வீதியில்
மதுகையொடு தறுகண் ஆனை வீரிட வென்று தாளால்
வலிய சகடு இடறி மாயமாய் மடி
படிய நடை பழகி ஆயர் பாடியில்
வளரு முகில் மருக ...

(45) லீலைகள் ஏழு : 1) பூதனை 2) குவலயாபீடம், 3) விளாமரம், 4) கொக்கு (பகன்) 5) மருதமரம் 6) சகடாசுரன் 7) மல்லர்கள்.

மருகன் என்று கருதாமல், (சூழ் கொல்ல கருதிய) சூழ்ச்சியால் கொல்ல எண்ணின, மாமனும் பாவியாகிய கம்சன், அனுப்பி வைத்த மாயத்தில் வல்ல பேயின் (பூதனையின்) முலையை உண்டும் (மேல்) பின்னும், கொல்ல வந்த குவலயாபீடம் என்னும் யானையின் தந்தங்களைத் திருகிப் பறித்தும், விளாமரத்தின் காய்களும் கனிகளும் (மதுகையில்) தனது வன்மையால் விழும் படித் தாக்கியும், அந்த (சதம்) இறகுகளை உடைய பெரிய கொக்காகிய பறவையுடன் சண்டை செய்து (அதன் வாயைப் பிளந்தும், இரண்டு கோரமான பருத்த மருத மரங்களின் மத்தியில் போய் (அம்மரங்களை முறித்தும்) அப்போது உரு(சகடு) வண்டியை உதைத்தும், மல்லர்களுடன் யுத்தம் செய்தும் திருவிளையாடல்களைச் செய்து, இடையர் சேரியிலே வளர்ந்த மேகவர்ணனும் திருமாலின் மருகனே.

(46) லீலைகள் நான்கு : மருதமரம், பூதனை, குவலயாபீடம், சகடாசுரன்

மருத மரங்களை நெறு நெறென முறியும்படி மோதியும், (கொல்லக்) கருதி வந்த அலகைப் பேயின் கொங்கையைக் குடைந்து தோண்டியும், வீதியில் வலிமையுடனும், கொடுமையுடனும் கொல்ல வந்த யானை அலறிக் கூச்சலிட அதை வென்றும், காலால், வலிமை வாய்ந்த வண்டியை எற்றி உதைத்து, தந்திரமாய் அசுரன் மடியும்படி, தவழ்ந்து நடந்தும், ஆயர் பாடியில் வளர்ந்த மேக வண்ணனும் திருமாலின் மருகனே.

(47) <u>இலகியிருகுழை</u> (இ.வ:— செ: 1004: ம: 1001)

அலகை உயிர் முலை அமுது செய்தருளிய
அதலன்

(48) <u>கலக சம்பரமத்தாலே</u> (இ.வ:— செ: 940, ம: 936)

உலக கண்ட மிட்டு ஆகாச மேல் விரி
சலதி கண்டிடச் சேராய மாமவ
ருடன் மடிந்திடக் கோபாலர் சேரியில் மகவாயும்
உணர் சிறந்த சக்ரா தார நாரணன் மருக

(49) <u>வெறுப்பு நாடிகள்</u> (இ.வ: 122; செ: 268; ம: 248)

உலக்கை ராவி நடுக்கடல் இட்டவன் மருகோனே

கந்தர் அலங்காரம்

(50) <u>படிக்குந் திருப்புகழ்</u> (அலங்காரம்: 50)

பெரும் பாம்பினின்று நடிக்கும் பிரான் மருகா

கந்தர் அந்தாதி

(51) <u>சேதாம்பலதுறை</u> (அந்தாதி- 44)

நந்தன் சே தாம்பலது உறையாத சிறுவன் திரு மருக

(52) <u>திதத்தத்</u> (அந்தாதி 54)

1 2 3 4 5 6
~~தாத~~ துத்தி தத்தி தா தித தத்து அத்தி
ததி தித்தித்ததே து

(47) <u>பூதனையை வதைத்தது</u>

(பெண்) பேயின் உயிரைக் கொங்கைப் பாலுடன் உண்டு
போக்கி அருளின தனக்கு ஒப்பில்லாதவனும்

(48) <u>உலக்கையைப் பொடி செய்து கடலில் இட்டு, யாதவகுலம் அழிந்தது</u>

(49) உலக்கையைத் துண்டு துண்டாக - பொடிப் பொடியாக ராவித்
தூளாக்கி, ஆகாயம் மேலே விரிந்துள்ள (நடுக்) கடலில் அப்
பொடிகளைச் சேரும்படி செய்து, கூட்டமான ஆயர் அனைவரும்
தம்முடன் மடிய, இடையர் சேரியில் குழந்தையாய் வளர்ந்தும்
(விளையாடின) ஞானம் சிறந்த சக்ராயுதக் கையனை,
(ஆதாரம்) காப்பவருமான நாராயண மூர்த்தியின் மருகனே.

(49) உலக்கையை அரத்தாற் பொடி செய்து நடுக்கடலில் எறிந்தவன்.

கந்தர் அலங்காரம்

(50) <u>காளிங்க நர்த்தனம்</u>

பெரிய காளிங்கன் என்னும் பாம்பின் மீது நின்று நடனம்
செய்த பெருமானும் திருமாவின் மருகனே.

கந்தர் அந்தாதி

(51) <u>கயிறல் கட்டுண்டது</u>

நந்த கோபன் பாலகனாகிய, நவநீதக் கள்வராய்க் கட்டுண்ட
கயிற்றாலன்றி, (உறையாத) மற்றொன்றாலுங் கட்டுண்ணப்படாத
சிற்றிடையனை கிருஷ்ணனது சிறந்த மருகோனே.

(52) <u>தயிருண்ட கண்ணன்</u>

படப்பொறியினையுடைய பாம்பினுடைய இடத்தையும், நிலைபெற்று
ததும்புகின்ற சமுத்திரத்தையும் பாயலாகக் கொண்டு,
(ததி) தயிரானது தித்திக்கின்றதென்று (து) உண்ட கண்ணன்

(14) வேல் வாங்கு வகுப்பு

(53) (28-30)

வரை நிரை கன்றினை முழுது மயங்கிய பண்கெழு
வேய் ஏந்திய வாயான், கழல்
மருதிடை சென்று உயர் சகடு தகர்ந்து அடர் வெம் புள்
வாய் கீண்டு ஒரு பேய் காய்ந்தவன்
மத சயிலம் பொர வரவிடு நெஞ்சினில் வஞ்சக
மாமான் பகை கோமான் திரு மருகன்.

---

(54) இடையித்தனே (இ.வ:— செ.1246: ம:1217)

திடமற்றெளிர் நளின ப்ரம சிறை புக்கனென ஒருந
ததி பட்சண க்ருத பட்சண செகபட்சண என ஓதும்
விட பட்சணர் திரு மைத்துனன்

(53) லீலைகள்: கோவர்த்தனகிரி, மருதமரம், சகடாசுரன், கொக்கு,
பூதனை, குவலயாபீடம், கம்சன்.

கோவர்த்தனகிரியின் கீழ், பசுக்கள், கன்றுகள் இவைகளின் கூட்டம் அத்தனையும், (மயங்கிய) கூட்டமாய் ஒரு சேரக் கூடுதற்கு (பண்கெழு) இசை பொருந்திய புல்லாங்குழலை தாங்கிய (வைத்திருக்கும்) திருவாயை உடையவன், தனது கால்களால், மருத மரங்களின் இடையே தவழ்ந்து போய், உயரமாயிருந்த சகடாசுரனை கொன்று, (அடர்) தன்னை நெருங்கி வந்த கொடிய (புள் - புள்ளி) கொக்கின் உருவமுள்ள பகாசுரனை, வாயைப் பிளந்து, பூதகி என்னும் பேயை அழித்தவன், மதம் கொண்டதும், மலை போன்றதுமான குவலயாபீடம் என்னும் யானையை சண்டை செய்ய (வரவிடு) அனுப்பினவனும், நெஞ்சில் வஞ்சனை எண்ணம் கொண்டவனுமான, மாமா கம்சனைப் பகைத்த பெருமானாகிய கண்ணனது லக்ஷ்மீகரம் பொருந்திய மருகன்.

(54) தயிர் நெய் உலகை உண்ட திருமால்

அறிவின் திடம் இல்லாது விளங்கினவனும், தாமரையில் வீற்றிருப்பவருமான பிரமன் (நீ இட்ட) சிறையில் அகப்பட்டுக்கொண்டானை அறிந்து (சிவபிரானிடம் குறையிடச் சென்றவரும்)

(ததி-ததி) தயிர் உண்டவர், நெய் உண்டவர், உலகை உண்டவர் என்று போற்றப்படுபவரும், விஷத்தை உண்ட சிவபிராற்கு அழகிய மைத்துனருமாகிய திருமால் . . .

திருப்புகழில் மகாபாரதம்

① முத்தைத்தரு (தி.வ: 5; செ: 1; ம: 6)

ஒரு பட்டப் பகல் வட்டத் திகிரியில் இரவாகப்
பத்தற்(கு) இரதத்தைக் கடவிய பச்சைப் புயல்

② குன்றுங் குன்றுங் (தி.வ: — செ: 115; ம: 150)

எங்குங் கஞ்சன் வஞ்சன் கொஞ்சன்
அவன் விடும் அதிசய வினையுறும் அலகையை
வென்றுங் கொன்றுந் துண்டந் துண்டஞ் செயும் அரி;
அண்டம் கண்டும், பண்டு உண்டும், பொங்கு
அமர்தனில் விஜயன் இரதமை நடவிய
துங்கன் வஞ்சன் சங்கன் . . .

③ சிந்தூர கூர மருப்பு (தி.வ: — செ: 178; ம: 155)

இந்திர நீல வனத்தில் செம்புவி
அண்ட கடாகம் அளித்திட்டு அண்டர்கள்
எண்படு சூரை அழித்து கொண்டு அருள் ஒரு பேடி
இன்கன தேரை நடத்தி செம் குரு
மண்டல நாடும் அளித்துப் பஞ்சவர்
இன்புறு தோழமை உடைக் கத்தன் திரு மருகோனே

திருப்புகழில் மகாபாரதம்.

(1) பகலை இரவாக்கிய பார்த்தசாரதி

ஒரு பட்டப்பகலை வட்ட வடிவமாயுள்ள (தனது) சக்கரம் கொண்டு இரவாக்கியும், பத்தனுடைய தேரை நடத்தின பச்சை மேகம் போன்ற திருமால்.

(2) பூதனை வதம்; பார்த்தனுக்கு சாரதி

(கவலை கொண்டு) ஏங்கியிருந்த கம்சனும் வஞ்சகன், அற்பன், அனுப்பிய அதிசயச் செயலையுடைய (பூதனை என்னும்) பேயை வென்று, கொன்று துண்டம் துண்டமாகச் செய்த ஹரி;

அண்டங்களை உண்டாக்கியும், முன்பு ஒரு நாள் அவைகளை உண்டும் சீறி வந்த போரில் அர்ச்சுனனது தேரை (பாகனாக இருந்து) நடத்திய பரிசுத்த மூர்த்தி. (வஞ்சர்க்கு) வஞ்சன், சங்க பாணியாகிய திருமாலின்

(3) காண்டவ வனத்தை எரித்த அர்ச்சுனனுக்கு சாரதியானது.

இந்திரனது காவலில் இருந்த காண்டவ வனத்தில் (எரியூட்டியும்) செவ்விய பூதல முதல் அண்ட கோளத்தின் மேலோடு வரையும், அவுணர்களின் துன்புறுத்தனின்றும் காப்பாற்றி, தேவர்களுடைய எண்ணத்தக்க (எண்ணி வருந்தத்தக்க) துன்பத்தை அகற்றி உதவிய ஒரு வேடியாகிய அர்ச்சுனனுடைய, அழகிய தேரை (சாரதியாய்) நடத்தி, செவ்விய குரு நாட்டை பாண்டவர்க்கு அளித்து, அப் பாண்டவ ஐவரின் தோழமையை (நட்பைப்) பூண்டிருந்த தலைவனை திருமாலின் மருகனே.

④ நெச்சுப் பிச்சிப் (இ.வ: — : செ: 245-2 : ம: 526)

நச்சுத் து சொப்பிச்சுக் குட்டத்து)
உட் தக்கு அட்டத்து அசி காண
நடத்தி, விடத்தை உடைத்த படத்தினில்
நட நவில், கடல் இடை அடு படை தொடு முகில்,
நகை முக திரு உறை மணி மார்பன்
நத்தத்தை சக்ரத்தை பத்மத்தை கைப் பற்றிப் பொரு மாயன்
நரிக்கும் அரிக்கும் எரிக்கும் விருப்புற நசிதரு நிசிசரர்
உடகுடல் இடல் செய்த நரகரி அரு திரு மருகோனே.

⑤ கரிவாம்பரி (வரிசேர்ந்திடு) (இ.வ: 183. செ: 248. ம: 529)

கரி வாம்பரி தேர் திரள் சேனையும்
உடனும் துரியோதனாதிகள்
களம் (ம்) மாண்டிடவே அரு பாரதம் அதில் ஏகி
கன பாண்டவர் தேர் தனிலே எழு
பரி தூண்டிய சாரதியாகிய
கதிர் ஓங்கிய நேமியனும் அரி.

பீமனைக் காத்தது; காளிங்க நர்த்தனம்

விடத்தை (து) உண்ட பீமன், (சொப்பிச்சு - சோபிச்சு - சோபித்து) (அந்த விடம் தாக்காது) விளங்கவும், (குட்டத்துள்) நீர் நிலையுள் (அட்டத்து குறுக்கே வைத்திருந்த, (அசி) வாள் முனைகள் (இருக்கும் இடம்) தெரியும்படி (நடத்தி) அவனுக்கு அருள் புரிந்தும் (காட்டியும்) விடம் உடையும்படி (கக்கும்படி) காளிங்கன் என்னும் பாம்பின் படி மகுடத்தின் மீது நின்று நர்த்தனம் செய்தும், கடல் மீது தொலைத நத்த தமது பாணத்தைச் செலுத்தியும், (ஆடல்கள் புரிந்த) மேக நிறத்துத் திருமால், சிரித்த முகத்தை உடைய, இலக்குமி உறையும அழகிய மார்பன், சங்கையும், சக்கரத்தையும், தாமரை போன்ற கையிற் பற்றி போர் புரியும் மாயன், நரிக்கும், (அரி..) வாளுக்கும் நெருப்புக்கும் விருப்பம் உண்டாகும்படி, அழிந்து போகின்ற அரக் கர்களுடைய குடலை உணவாக இடுதலைச் செய்த திருமால், நரகாசு ரனைக் கொன்றவருமாகிய திருமாலின்

(5) பாரதப் போரில் துரியோதனாதிகளை அழித்தது; பார்த்தசாரதியானது

யானை. (வாம்) தாவும் குதிரை. தேர். திரண்ட சேனை இவைகளைக் கொண்டவனும் துரியோதனன் முதலானோர் போர்க்களத்தில இறந்து போகுமாறு, ஒரு பாரத யுத்தத்தில் ஈடுபட்டு, பெருமை மிக்க அர்ச்சுனனுடைய தேரில் பூட்டிய ஏழு குதிரைகளைத் தாண்டிச் செலுத்திய சாரதி, ஒளி வீசும் சக்கரத்தை உடைய அரி, . .

(6) அகத்தினைத் (கி.வ: — செ: 324: ம.540)

புலிக்குள் யுத்தம், புத்திரர் செய் அரசு
அனைத்தும் முற்றும் செற்றிடவே பகை
புகட்டி வைக்கும் சக்கிர பாணி தன் மருகோனே.

(7) சீரான கோல (கி.வ: 199; செ: 350; ம. 568)

கூர் ஆழியால், முன், வீய நினைபவன்
ஈ.டேறுமாறு, பானு மறைவு செய்
கோபாலராய நேயம் உள திரு மருகோனே.

(8) உருவேறவே ஜெபித்து (கி.வ: — செ: 355: ம: 573)

குரு நாக இராசரிக்கர் துரியோதனராதி வர்க்க
குடமான மாயமிட்டு குந்திபாலர்
குலையாமல் நீதி கட்டி எழு பாரை ஆளவிட்ட
குறள் ஆகன் ஊரில் நெட்டை கொண்ட ஆதி மருகா

(9) எதிரெதிர் கண்டோடி (கி.வ: — செ: 356: ம: 574)

விதுரன் நெடுந் த்ரோணம் ஏற்று
எதிர் பொரும் அம்பு ஆதி ஏற்றி
விரகின் எழுந்து ஓய நூற்றுவர் மாள
விரவு ஜெயன் தாளி காட்டில்
வரு தருமன் தூதன், நீற்ற
விஜயன் நெடும் பாகன், தீர்த்தன் மருகோனே.

(6) போரில் யாவரும் அழிய பகையை மூட்டிய சக்கிரபாணி.

பூமியில் யுத்தம் வரவும், புதல்வர்கள், குழந்தைகள், அரசர்கள் யாவரும், ஒருவரை கொல்லும்படி பகையை மூட்டி வைத்த சக்ராயுதத்தை ஏந்திய கையராகிய திருமாலின் மருகனே.

(7) சக்கரத்தால் சூரியனை மறைத்தது

கூர்மையுள்ள சக்கரத்தால் (பாரதப்போர் நடந்த அந்த காலத்தில்) இறப்பதற்கு எண்ணித் துணிந்த அர்ச்சுனன் உய்யுமாறு, சூரியனை மறைத்து வைத்த, கோபாலர்களுக்கு அரசனை கிருஷ்ண பகவான் அன்பு வைத்துள்ள அழகிய மருகனே.

(8) துரியோதனாதிகளை அழித்து பாண்டவர்களுக்கு அரசளித்தது.

குருநாட்டை அரசாட்சி செய்த துரியோதனாதியர் கூட்டத்தின் குடி அழியும்படி மாயச் செயல்களைச் செய்து, குந்தி தேவியின் புதல்வர்களாகிய பாண்டவர்கள் அழியாதபடி காத்து, நீதி முறையை நிலைப்படுத்தி, உலகங்களையும் அவர்கள் ஆளும்படி வைத்தவனும் குறள் வடிவில் வந்து, கெடுதலில்லாத நெடிய உருவத்தைக் கொண்ட

(9) விதுரன் போர் செய்யாமல் ஓயும்படி செய்தது: பார்த்தசாரதியானது

விதுரன் தனது பெரிய வில்லை எடுத்து, எதிரியுடன் போர் செய்ய அம்பு முதலிய பாணங்களை அதில் ஏற்றிச் சாமர்த்தியத்துடன் எழுந்து போர் புரிதல் ஓயுமாறும் (இல்லாமற் போகுமாறும்) துரியோதனன் ஆகிய நூற்றுவரும் மாளவும், உபாயம் செய்த ஜெய வீரன், துர்க்கை வாழும் வனத்தில் வாசஞ் செய்த தருமபுத்திரருக்கு தூதன், திருநீறிட்டு தவம் செய்த அர்ச்சுனனுடைய பெரிய சாரதியாம், பரிசுத்த மூர்த்தி - ஆகிய திருமாலின் மருகனே.

(10) தருமமான (கிவ. 426: செ: 481. ம: 339)

தரும வீம அருச்சன நகுல சகாதேவர்க்குப் புகலாகி
 சமர பூமியில் விக்ரம வளொடு நாளோர் பத்தெட்டினில் ஆளும்
குருமகீதலம் உட்பட உளம் அது கோடாமல். க்ஷத்திரியர் மாள.
 குலவு தேர் கடவு அச்சுதன் மருகா

(11) சதுரத்தரை (கி.வ: 276: செ: 751: ம: 747)

விதுரர்க்கும் அராக்கொடியானையும்
 விகடத்(து) உற(வை) ஆக்கிய மாதவன்
 விசையற்(கு) உயர் தேர்ப்பரியூர்பவன் மருகோனே.

(12) பசையற்ற (கி.வ: 311: செ: 756: ம: 752)

வசையறு முடிவற்று வளர் பற்றின் அளவற்ற
 வடிவுற்ற முகில் கிட்ணன் மருகோனே.

(13) வட்டமன் விதிப்படி (கி.வ: 241: செ: 789. ம: 785)

வீட்டில் அடைத்(து) எரியே இடு பாதகன்
 நாட்டை விடுத்திடவே பல சூதினில்
 வீழ்த்த விதிப்படியே ஒரு காவலர் வனமே போய்
வேற்றுமை உற்றுருவோடியல் நாளது
 பார்த்து முடித்திடவே ஒரு பாரதம்
 மேற்புனைவித்த மகா விர மாயவன் மருகோனே

(10) பஞ்சபாண்டவர்கட்கு புதலாகி, க்ஷத்திரியர்களை அழித்த, அர்ச்சுனன் தேர் கடவு அச்சுதன்

தருமன் முதலிய ஐவர்க்கும் சரண் அளிப்பவன் ஆகி, போர்க்களத்தில் பராக்ரமம் வாய்ந்த (வளை) சங்கு கொண்டு, பதினெட்டு நாள் நிகழும் (போரில்) இடம் குரு க்ஷேத்திரமாக. தமது திருவுள்ளம் நெறி முறையில் நிற்கவும், அரசர்கள் யாவரும் இறந்து படவும், அர்ச்சுன னுடைய சிறந்த தேரைச் செலுத்திய நாராயணனுடைய . .

(11) விதுரர்க்கும் துரியோதனனுக்கும் பிளவை உண்டாக்கியது

விதுரனுக்கும், பாம்புக்கொடி கொண்ட துரியோதனனுக்கும் மனம் வேறுபட்ட உறவை உண்டு பண்ணின கண்ணபிரான் அர்ச்சுனனுடைய பெரிய தேர்க்குதிரைகளைச் செலுத்தினவன் ஆகிய திருமாலின் மருகனே.

(12) அளவுற்ற வடிவை (சகாதேவனுக்குக்) காட்டின கண்ணபிரான்

பழிப்புக்கு இடமில்லாமல், முடிவிலாது வளர்ந்திருந்த பக்தி (பாண்டவர் மீதிருந்த) பற்றின் காரணத்தால், அளவுற்ற வடிவைக் கொண்ட (சகாதேவனுக்குக் காட்டின) மேக நிறத்தவனாம் கிருஷ்ணன்

(13) பாரத வரலாறு: பாரதப் போரை நடத்துவித்த மகாவீர மாயவன்

அரக்கு மாளிகையில் இருக்கச் செய்து எரியிட்ட பாதகனாம் துரியோதனனுடை நாட்டை விட்டுப் போகும்படி பல சூதாட்டங்களில் ஏற்பட்ட விதிப் பிரகாரம் குரு குலத்து அரசராம் (ஐவரும்) கானகம் போய், வேறு வேடம் பூண்டு அஞ்ஞாத வாசம் செய்திருந்த நாளின் முடிவு பார்த்து ஒரு பாரத யுத்தத்தை மேலே நடக்கும்படி செய்த மகா வீர மாயவராம் கண்ணனின் மருகனே.

(14) விகட சங்கு (கி.வ: — ; செ. 894 . ம : 890)

திகிரி கொண்டு கிருளாக்கியே கிரு
தமையர் தம்பியர் மூத்த தாதையர்
திலக மைந்தரை ஏற்ற சூரரை வெகுவான
செனம் அடங்கவு மாற்றியே உடல்
தகர அங்கவர் கூட்டமையே நரி
திருகி உண்டிட ஆர்த்த கூளிகள் அடர் பூமி
அகடு துஞ்சிட மூட்டு பாரத
முடிய அன்பர்கள் ஏத்தவே அரி
யருகு மைந்தர்கள் வாழ்த்து மாயவன் மருகோனே.

(15) குயிலோ மொழி (கி.வ. — செ: 913 ; ம:909)

வெயில் வீசிய கதிர் ஆயிர அருணைய விருசை
விசை ஏழ் பரி ரவி சேயெனு அங்க ராசன்
விகி காதவ அயல் வேடிகை கை படு போது சன்னிதியானவன் . .

(16) ஆளநிர்க் குவட்டு (கி.வ. — செ:928 . ம:924)

நரதுக்கு அமைந்த கொடி கிரதச் சுதக் கள்வன்
நறை புட்ப நற்றுளவன் மருகோனே

(14) பகல் இருளாக்கியது: துரியோதனனை அழித்தது

சக்கரத்தைக் கொண்டு பகல் இருளாக்கி, கர்ணன், துரியோதனன் ஆகிய இரண்டு தமையன்மார்களையும், இளைய (துரியோதனன்) தம்பிமார்களையும், பீஷ்மர் முதலிய மூத்த பெரியோர்களையும், சிறந்த பிள்ளைகளையும், (போரை) ஏற்று வந்த சூரர்களான பகைவர்களையும், அதிகமான ஜனங்கள் யாவரையும் அழித்து அவர்கள் உடல் பொடியாக, நரிகள் திருகி உண்ணப் பேரொலி செய்யும் பேய்கள் நிறைந்த போர்ப் பூமியில், நடுவு நிலைமை குறைய, மூள்வித்த பாரதப்போர் முடிய, அன்பர்கள் துதிக்க (அரி) இயமன் வாயு இந்திரன் ஈன்ற மைந்தர்களான தருமன் பீமன், அர்ச்சுனன் வாழ்த்தித் துதிக்கும் மாயவன்,

(15) போர்க்களத்தில் கர்ணனுக்கு தரிசனம் தந்தது

ஒளி வீசும் ஆயிரக்கணக்கான கிரணங்களை வீசுபவனும், உதயகாலத்தில் இருளை ஒழிக்க வல்லவனும், வேகமாகச் செல்லும் ஏழு குதிரைகளைக் கொண்டவனுமான சூரியனுடைய பிள்ளையான அங்க தேசத்து அரசனை கர்ணன், அம்புகள் நிறைந்த போரில் தனக்குப் பகையாயிருந்த பேடி அர்ச்சுனனுடைய கை அம்பால் இறந்து படும் போது ப்ரத்யக்ஷமாய் தரிசனம் தந்தவனுமான திருமா

(16) அர்ச்சுனனுக்கு தேர்ப்பாகன்

அருச்சுனனுக்கு ஏற்பட்டிருந்த (அநுமக்) கொடி பறக்கும் தேரில், (அதன்) தேர்ப்பாகனாக விளங்கிய கள்வன், தேன் கொண்ட மலர்களையும், சிறந்த துளவ மாலையையும் அணிந்தவன் ஆகிய திருமாலின் மருகனே.

(17) சஞ்சல சரித (கி.வ: — செ: 932; ம: 928)

பஞ்சவர், கொடியவினை நூற்றுவர் வென்றிட சகுனி கவருற் பொருள்
பங்குடை அவனி பதி தோற்றிட அயலே போய்
பண்டையில் விதியை நினையாப் பனிரண்டுடை வருஷ முறையாப் பல
பண்புடன் மறையின் முறையாற்றிரு வருணாலே
வஞ்சனை நழுவி நிரை மீட்சியில் முந்து தமுடைய மனை வாக்கையின்
வந்து பினுரிமையது கேட்டிட கிசையா நாள்
மண் கொள விசையன் விடு தேர்ப்பரி யுந்தினன் மருக

(18) குருவு மடியவ ரடிய (கி.வ: — செ: 934 ; ம: 930)

நிலை கெட, உலவில் நிலவறை உருவிய அருமையும் ஒரு நூறு
நிருப ரணமுக வாசர்கள் வலிதப
விசயன் ரதமுதல் நடவிய எளிமையு
நிகில செகதலம் உரை செயும் அரி திரு மருகோனே.

(Pl. see (24) page 11)

(19) அதல சேடனை (கி.வ: 325 ; செ: 1056 ; ம: 1053)

கதை விடாத தோள் வீமனை எதிர் கொள் வாளியால் நீடு
கருதலார்கள் மாசேனை பொடியாக
கதறு காலி போய் மீள விஜயனை ஏறு தேர் மீது
கனக வேத கோடூதி அலைமோதும்
உததி மீதிலே சாயும் உலக மூடு சீர்பாதம்
உவணம் ஊர்தி மாமாயனை மருகோனே.

(17) பாரத கதைச் சுருக்கம் :

பஞ்ச பாண்டவர்கள், கெட்ட செயல் கொண்ட துரியோதனாதிகள் நூற்றுவரும் வெற்றி கொள்ளச். சகுனி ஆடிய சூதாட்டத்திலே தங்கள் பொருளையும், பாகமாய் இருந்த பூமியையும் அவர்களையும் தோற்றதால், நாடு கடந்து வேறிடம் சென்று, பழைய வினையை நினைத்து 12 வருஷம் கழித்து, பல இடங்களில் அஞ்ஞாத வாசம் செய்து (இறைவன்) திருவருளால், சபத நாள் (வருவ) நிறைவு பெற, கவரப்பட்ட பசுக்களை மீட்ட பின், தங்களுக்கு இருந்த இல்லற நிலையில் வந்த பின்பு, தங்களுக்கு உரிய பாகத்தைக் கேட்க, அதற்கு இசையாத நாளில், அவர்கள் பாகத்துப் பூமியைப் பெறும்படி அர்ச்சுனன் விட்ட தேரின் குதிரையைச் செலுத்தின திருமாலின்

(18) பாதாள அறையில் விசுவரூபம் எடுத்தது; நூற்றுவரை அழித்தது

நிலை தடுமாற உலவுதற்கு வழியில்லாததுமான பாதாள அறையில் விசுவரூபத்துடன் தோன்றி எழுந்த அருமையும் (பெருமையையும்) ஒப்பற்ற நூறு அரசர்களும் (துரியோதனாதியர்கள்) போர்க்களத்தில் உற்ற மற்ற அரசர்களும் வலிமை கெட்டொழிய அருச்சுனனுடைய தேரை முன்பு செலுத்தி ஓட்டின எளிமைக் குணத்தையும் எல்லாப் பூமிகளும் புகழ்ந்து உரைக்கும் திருமாலின் திருமருகனே.

(19) விஜயனது தேரிலிருந்து கதை வேத கோடும் மாமாயன்

கதையைத் தோளிலிருந்து விடாத பீமசேனன் எடுத்துச் செலுத்தின பாணப்ரயோகத்தில், பெரிய பகைவர்களின் பெருஞ்சேனைகள் பொடிபட (உதவினவரும்) கதறிச் சென்ற பசுக்கூட்டங்கள் போனவை மீண்டு வர குழல் ஊதினவரும். விஜயன் ஏறிச் சென்ற தேர் மீது பாகனாயிருந்து பொன் மயமானதும் வேத ஒலியைத் தருவதுமான (கோடு) சங்கத்தை ஊதினவரும், அலை மோதி வீசும் (பாற்) கடலிலே, (சாயும்) பள்ளி கொள்பவரும்

(20) சரிய மவலி (கி.வ:— ; செ: 1058; ம: 1055)

விகட மகுட பார்த்திபர் அனைவருடனு நூறுவர்
விசையனொருவனை பட ஒரு தூது
திரியும் ஒரு பராக்ரம அரியின் மருக

(21) மோதுமறவி (கி.வ.416: செ. 1195: ம: 1196)

சூது பொரு தருமன் நாடு தோற்று கிரு
ஆறு வருஷம் வன-வாசம் ஏற்று இயல்
தோகையுடனுமெ விராட ராச்சியம் உறை நாளிற்
சூறை நிரை கொடு அவர் ஏக மீட்டெதிர்
ஆளும் உரிமை தருமாறு கேட்டு ஒரு
தூது செல அடுவலாண்மை தாக்குவனென மீள
வாது சமர் திருதராண ராட்டிர
ராஜகுமரர் துரியோதனற் பிறர்
மான நிருபரொடு சேனை தூட்பட வரிசாப
வாகை விஜயன் அடல் வாகி பூட்டிய
தேரை முடுகு நெடுமால் பராக்ரம
மாயன் மருக அமர் நாடார் பார்த்திப பெருமானே

(22) மகனு மனைவியு (கி.வ:— செ: 1059: ம: 1056)

புகல அரிய போர்க்கில் விருத்த விசையனை புக
ஒடைய திருதராட்டிர புதல்வோர் தம்
புரவி கரிகள் தேர்ப்படை மடிய அரசை மாய்த்(து) உயர்
புவியின் விதனை மாற்றினார் மருகோனே.

(23) துரியோதனாதிகள் வீர சொர்க்கம் அடைய தேரைச் செலுத்தினது

திருதராட்டிரன் பெற்ற துரியோதனாதி நூறு பேரும், வீர சுவர்க்க நாட்டை ஆளும்படி - பதினெட்டு நாளில் போர்க்களத்தில் மாண்டு விழவும், சிறப்புற்ற அருச்சுனனும், உலகை ஆண்டு காத்தருளும் சீருடன் வாழுமாறு, அவனுடைய தேரில் சாரதியாயிருந்து தேரைச் செலுத்தின பெருமான் திருமாலின் மருகனே.

போர்க்களத் தலகை வகுப்பு

(24) பாதாள அறையில் விசுவரூபம் எடுத்தது; பூபாரம் தீர்த்தது.

ஒப்பில்லாத தருமங்களைச் செய்த, குருகுல பஞ்ச பாண்டவர்களின் உண்மையான தூதின் பொருட்டு, வெகு விரைவாக முன்னர் தூதுபோய், ரத்னக்ரீடங்கள் அணிந்துள்ள, (சபையில் இருந்த) அரசர்கள் பயம் கொள, நெறு நெறென்று கீழிறங்கின, பொற்பீடத்தில் நிலை பெற்று வீற்றிருந்து, துரியோதனாதிகள் நூறு பேரும், அவரவர் அறிந்து நினைவில் வைத்துக்கொள்ளும்படி, வலிமை பொருந்திய ஒப்பற்ற 18 அக்ரோணிப் படை எல்லாமும் இறந்து, யமனுக்கு நிறைய (விருந்தாக) பூதேவியின் பெரிய பாரமாயிருந்தவர்களை, கோபித்து அழித்த திருமால், முன்னர் ஆகாய முகடு முட்டும்படி, நீதிநெறி விளக்கும் உறவும் விசுவரூபம் எடுத்த உடம்பையெடுத்த பெருமான் மருகனே

(25) விஜயனுக்கு தேரோட்டி சகலரையும் அழித்தது

வடவைத் தீயைப் போல், மணிமுடி தரித்த அரசர்கள் பலரும் எரியுண்டு பஞ்சாய்ப் பறக்க, மேல்மேல் எழுந்த (மாறு) பக்கங்கள் - எதிரிகள் இரு பக்கத் தானை (படை நாடு) போரை நடத்தின பெருமையிற் சிறந்தோனை வசைக்கு இடமான குருகுலத் தலைவனும் (துரியோதனன்) அவன் தம்பிகளும இறக்க, அருச்சனனுக்கு தேரை ஓட்டினவன்.

(26)

கந்தர் அந்தாதி

றை
<u>செற்றே வரும் பழனம்</u> .. (அந்தாதி. 22)

நூற்றுவரைச் செற்று ஐ வரும் பழநாடு ஆன

நாடி . . . .

நூற்றுவரை அழித்தது

துரியோதனன் முதலிய நூறு பேரையும் கொன்று,
பாண்டவர்கள் பழைய ராஜ்ஜியத்தை ஆளும்படி கருதிய
கண்ணபிரான் . . .